# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

## செப்டம்பர் 2004



ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 4    ஆண்டு சந்தா ரூ.50/-    கனி 10

***கர்த்தருடைய வேதத்தில் இரவும் பகலும் தியானமாயிருக்கிற இந்த பாக்கியவான்களை வாழ்த்துகிறோம்***

வேத அறிவுப்போட்டி எண்37 லிருந்து 48வரை வெளிவந்த அனைத்து இதழிலும் வெற்றி பெற்று முதலாவது இடத்திலும் மற்றும் இரண்டாவது, மூன்றாவது இடத்திலும் இருப்பவர்கள்

அடுத்த ஆண்டு முதலிடத்தில் இருப்பவர் யார்? ஒருவேளை நீங்களாக இருக்கலாம் முயற்சியுங்கள்

***முதல் இடம்***

Mrs. ஜாஸ்மின் வின்செண்ராஜ் - மதுரை
P.S. லலிதா பிரேம குமாரி - மதுரை
Dr. ஜெசிங் - சென்னை
T. வேலுச்சாமி - ஜேடார்பாளையம்

***இரண்டாம் இடம்***

S. தண்டபானி - சிலுவத்தூர்
A. சேவியர் மேரி - மதுரை
P. அலிஸ்மேரியம்மாள் - வதிலை
Mrs. எஸ்தர் சேகர் - கோபி
J.S. நிர்மலா ஜான் - மதுரை
G.P. ஏசையன் ராஜ் - கோபி
N. கமலவேணி - சென்னை

***மூன்றாம் இடம்***

S. ஆனந்த ராஜ் - ஈரோடு
Mrs. வனிதா சாமுவேல் - மதுரை

***இப்போட்டியில் கலந்து கொண்டவர்கள் 200-க்கும் மேற்பட்டவர்கள். அனைவருக்கும் எமது அலுவலகத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்***

ஒருவழி

'ஒருவழி' வேதபாடம் The Master Course படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய்30-ஐ அனுப்பி இரண்டு வருடத்தில் முடித்து Certificate பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, Post Box 5, Batlagundu-624 202 S.INDIA**

**ஆசிரியர் கடிதம்**

**வாசகர்அனைவருக்கும் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள். இதுவரை தமிழகத்தில் 15-ந்து மாவட்டங்களில் வாசகர் கருத்தரங்கு நடத்தியுள்ளோம் ஏனைய மாவட்டங்களிலும் கருத்தரங்கு நடத்தவிரும்புகிறோம் விருப்பமுள்ளவர்கள் எங்களோடு தொடர்புகொள்ளுங்கள்.**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 4 செப்டம்பர் 2004


ஆசிரியருரை

## உன் வாயைவிரிவாய்த்திற
## Open thy mouth wide

"உன்னை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே; உன் வாயை விரிவாய்த்திற, நான் அதை நிரப்புவேன்" (சங்.81:10) என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறார். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, 40வருஷம் வனாந்தரத்திலே தேவ தூதர்கள் சாப்பிடுகிற மன்னாவினாலே போஷித்த கர்த்தர் உன் வாயை விரிவாய்த்திற நான் அதை நிரப்புவேன் என்கிறார். இவ்வசனத்தை வாசிக்கும்போது எங்களுடைய வீட்டின் ஓரத்தில் உள்ள ஒரு கொய்யாமரத்தின் மீது கூடுகட்டி குஞ்சுபொரித்த குருவியின் ஞாபகம் வருகிறது. ஒரு ஆண்குருவியும் பெண்குருவியும் சேர்ந்து தங்களுடைய அலகுகளால் சிறு சிறு துரும்புகளை கொண்டு வந்து ஒரு கூட்டைகட்டி உட்புறம் பஞ்சுபோல் உள்ள சாதனங்களால் மெத்தைபோல் விரித்து அக்கூட்டிற்கு செல்ல ஒரே வழி மட்டும் அமைத்து பின்பு முட்டையிட்டு அடைக்காத்துவந்தது சில நாட்கள் கழிந்தன குஞ்சுகளின் சத்தம் கேட்கஆரம்பித்தது. அந்த குருவியின் குஞ்சுகள் தன் தாய் தகப்பன் எப்பொழுது தங்களுக்கு ஆகாரம் கொண்டுவருவார்கள் என்ற ஆவலோடு தங்களுடைய அந்த சிவப்பான அலகை ஆ.... ஆ.... வென்று விரிவாய்த் திறப்பதைப்பார்க்க பார்க்க அவ்வளவு அழகாயிருந்தது அவைகள் தங்கள் தாய் தகப்பன் மீதுகொண்டுள்ள நம்பிக்கையையும், தேவனிடமிருந்து அவைகளுக்கு கிடைக்கப்பெற்ற இரக்கத்தையும் நாங்கள் எங்கள் வீட்டு சன்னல் வழியாக பார்க்க ஒரு தருணம் கிடைத்தது. நாமும் தேவனுடைய பார்வையில் இந்த குருவிக்குஞ்சுகளைப்போல இருந்து கொண்டு நம்முடைய வாயை விரிவாய்த்திறக்கும்போது அதை அவர் நிரப்பக் கூடியவராயிருக்கிறார். "அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரம்



கொடுக்கிறார்" (சங்.147:9).

"இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" என (அப்.2:47)-ல் வாசிக்கின்றோம். அவர் இரட்சிக்கிறவர் மட்டுமல்ல போஷிக்கிறவரும்கூட. இஸ்ரவேலை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அழைத்த தேவன் அவர்களை எப்படிபோஷித்தாரோ, அதைப்போல இன்று பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அவர்களை போஷிக்கிறார். "கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல" (எபே.5:29) என்று வாசிக்கிறோம். கர்த்தர் ஆவிக்குரிய போஜனத்தையும் சரீரத்துக்குரிய போஜனத்தையும் கொடுக்க வல்லவராயிருக்கிறார். இயேசுவைப் பின்பற்றின திரளான ஜனங்களில் அநேகர் போஜனத்திற்காகவே பின்பற்றினதாக வாசிக்கிறோம். "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம் புசித்துத் திருப்தியானதினாலே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார்" (யோவா.6:26-27). ஆம் சதா அழிந்து போகிற போஜனத்திற்காகவே வாழக்கூடாது. அழியாத வாழ்வாகிய நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கக்கூடிய ஆவிக்குரிய போஜனத்தைப் பெற்று ஆவியில் வளரவேண்டும். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்பார்கள் உண்மைதான் அழுதால்தான் பிள்ளைக்குப் பால் கிடைக்கும் அதைப்போல நம் தேவனை நோக்கி வாயை விரிவாய்த்திறந்து அழுது ஜெபிக்கும்போது தேவன் நம்முடைய பசியைப் போக்கக்கூடியவராயிருக்கிறார். "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்: தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக்கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளை கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?" (மத்.7:7-11).

"அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக்கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்" (சங்.145:19). மேலும் தேவனுக்கு பயந்தவர்களை "உச்சிதமான கேதுமையினால் அவர்களைப் போஷிப்பார்; கன்மலையின் தேனினால் உன்னைத் திருப்தியாக்குவேன்" (சங்.81:16) என்கிறார். ஒரு சில கூட்டம் இருக்கிறது நல்ல வஸ்திரம் உடுத்தக்கூடாது, நல்ல சாப்பாடு சாப்பிடக்கூடாது, நல்ல வீட்டில் இருக்கக்கூடாது மோட்டார் சைக்கிள், கார் போன்றவற்றில் போகக்கூடாது பாடி பரதேசிகளைப்போல இருக்கவேண்டும்

என்பார்கள். இவர்கள் எல்லாம் கொஞ்சங்குறைய யூதாஸை சார்ந்தவர்கள் ஏனென்றால் அவன் கர்த்தருக்குப் பரிமள தைலம் பூசும்போது அதை விற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றான்.ஆனால் கர்த்தர்,மேற்கண்ட வசனத்தின் படி உச்சிதமான கோதுமையினால் திருப்தியாக்குகிறவராயிருக்கிறார். உச்சிதமான கோதுமையினால் போஷிக்கக்கூடிய ஆண்டவரை உச்சிதமான பரிமள தைலத்தினால் கனம் பண்ணினாள் அந்த ஸ்திரீ. யூதாஸோ பணப்பேய் பிடித்திருந்தபடியால் அப்படி சொன்னான்.

**வாயை விரிவாய்த்திறக்கிறபோது கர்த்தர் சுகம் கொடுக்கிறவரும்கூட.** "அவர் எரிகோவுக்கு சமீபமாய் வரும்போது, ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்தான். ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்ன என்று விசாரித்தான் நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது அவன்: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான். இயேசு நின்று, அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி சொன்னார். அவன் கிட்டவந்தபோது, அவர் அவனை நோக்கி: நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்று கேட்டார். அதற்கு அவன்: ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி: நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்" (லூக்.18:35,42). மற்றவர்கள் இந்த பிறவிக்குருடனை அதட்டியபோதிலும் அவன் தன் சத்தத்தை குறைக்கவில்லை இன்னும் அதிகமாய் கூப்பிட்டான் என்று வாசிக்கின்றோம். சுகம் கிடைக்க வேண்டுமென்றால் நம் வாயை விரிவாய் திறக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

எசேக்கியா ராஜா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான் அப்பொழுது "ஏசாயா தீர்க்கதரிசி வந்து நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்" (2இரா.20:1). நமக்குத் தெரியும் கர்த்தர் தீர்க்கதரிசிகள் மூலமாக சொன்னால் சொன்னதுதான் அதை மாற்றமாட்டார். ஆனால் இந்த எசேக்கியா ராஜாவின் விஷயத்தில் அவனுடைய கண்ணீர் விண்ணப்பத்தைக் கேட்டு உடனே அவன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் சொல்லி, அத்திப்பழத்து அடையைக் கொண்டவந்து பிளவையின் மேல் பற்றுப்போட்டபோது எசேக்கியா பிழைத்தான். ஆம் பிரியமானவர்களே இந்த எசேக்கியாவைப்போலும், பிறவிக்குருடனைப்போலும் நாம் வாயை விரிவாய்த்திறக்கும்போது சுகத்தை பெற்றுக்கொள்வோம்.

**வாயை விரிவாய்த்திறக்கிறபோது கர்த்தர் விடுதலை கொடுக்கிறவரும்கூட.** "ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்" (சங்.50:15).

ஆபத்திலே மாட்டிக்கொண்டு அல்லல் படுகிறவர்களுக்கு இது ஒரு நற்செய்தியாகும். பவுலையும் சீலாவையும் அநேக அடி அடித்த பின்பு சிறைச்சாலையில் வைத்து அவர்களைப் பத்திரமாக காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள். அவர் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்று, அவர்களை உட்காவலறையிலே அடைத்து அவர்கள் கால்களைத் தொழுமரத்தில் மாட்டி வைத்தார்கள். நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப்பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று" (அப்.16:23-26). கர்த்தர் ஒரு பெரிய அசைவை ஏற்படுத்தினார். தேவ பிள்ளைகளை அங்கே கட்டிவைக்க முடியாமற்போயிற்று அன்று இரவிலே அவர்கள் செய்த விண்ணப்பம். தாங்கள் இந்நிலைமையில் இருக்கிறோம் என்ற கவலை அவர்களுக்கு இல்லை மாறாக வாயைவிரிவாய் திறந்து தேவனை துதித்தார்கள். நடந்தது என்ன? பொழுது விடிந்தபின்பு; அந்த மனுஷரை விட்டுவிடுங்கள் என்று சொல்ல அதிகாரிகள் சேவகர்களை அனுப்பினார்கள்.

நேபுகாத்நேச்சார் அறுபது முழ உயரமும் ஆறு முழ அகலமுமான ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து அதைப்பணிந்து கொள்ளும்படி எல்லாரையும் கேட்டுக்கொண்டான். அப்பொழுது ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிற சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ மறுத்தபடியால் அக்கினி சூளையில் போடுவித்தான் அவர்களோ "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார் (தானி.3:17) என்றார்கள். பின்பு நடந்தது என்ன? "இதோ, நாலுபேர் விடுதலையாகி அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின்சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான் ராஜா" (தானி.3:25). தங்கள் வாயை விரிவாய்திறந்து ராஜாவுக்கு பயப்படாமல் மறுமொழி கொடுத்த அந்த மூன்று தேவமனிதர்களையும் கர்த்தர் விடுவித்தார்.

**வாயை விரிவாய்த் திறக்கும்பொழுது வெற்றியையும் கட்டளையிடுகிறவர் நம் கர்த்தர்.** இஸ்ரவேலர் எரிகோவை கர்த்தர் கொடுத்த கட்டளைப்படி ஆறுநாளும் ஒவ்வொரு முறை சுற்றிவந்து ஏழாம் நாளிலே ஏழுமுறை சுற்றிவந்து எக்காள தொனியுடன் ஆர்ப்பரித்தார்கள். (யோசு.6:15,16). இஸ்ரவேலரின் ஆர்ப்பரிப்பிலே அலங்கங்கள் இடிந்து விழுந்தது. அவர்கள் எரிகோவை வெற்றி கொண்டார்கள். நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை

விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2தீமோ.4:7,8) என்று பவுல் குறிப்பிடுகிறார். இம்மையிலும் மறுமையிலும் வெற்றியுள்ள வாழ்க்கைவாழ பவுலுடைய இந்த புத்திமதிகளை ஏற்று செயல்படுது அவசியம்.

உன் வாயை விரிவாய் திறக்கும்போது அதை நிரப்புவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நிறைவு என்பது திருப்தியை குறிப்பதாகும். திருப்தியுள்ளவன் தேன் கூட்டையும் மிதிப்பான் என்ற வசனத்தின்படி அந்த அளவுக்கு நம்மை ஆசீர்வதிக்கக் கூடியவராயிருக்கிறார். தாவீதைப்போல ஒப்புக்கொடுப்போம். " என் ஜீவனுள்ள மட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன். நிணத்தையும் கொழுப்பையும் உண்டது போல என் ஆத்துமாதிருப்தியாகும்; என் வாய் ஆனந்தக் களிப்புள்ள உதடுகளால் உம்மைப் போற்றும்" (சங்.63:4,5). நம்மை போஷித்து, சுகப்படுத்தி, விடுவித்து, வெற்றியைக் கொடுக்கும் கர்த்தர் "என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும், நியாயப்பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்" (நீதி.8:20,21) என்கிறார். உங்களுடைய களஞ்சியங்கள் நிரம்ப வாயை விரிவாய் திறந்து ஜெபியுங்கள், துதியுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதிப்பாராக!

### கை

- ✦ சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்;
  சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும் - நீதி.10:4
- ✦ கையோடே கைகோத்தாலும், துஷ்டன் தண்டனைக்குத் தப்பான்;
  நீதிமான்களுடைய சந்ததியோ விடுவிக்கப்படும் - நீதி.11:21
- ✦ ஜாக்கிரதையுள்ளவர்களுடைய கை ஆளுகைசெய்யும்; சோம்பேறியோ பகுதி
  கட்டுவான் - நீதி.12:24
- ✦ புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ
  தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள் - நீதி.14:1
- ✦ சோம்பேறியின் கைகள் வேலைசெய்யச் சம்மதியாததினால், அவன்
  ஆசை அவனைக் கொல்லும் - நீதி21:25
- ✦ உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால் அதைத்தறித்து
  எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில்
  தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று
  கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும் - மத்.5:30
- ✦ திருடுகிறவன் இனித்திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக்
  கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால்
  நலமான வேலை செய்து, பிரயாசப்படக் கடவன் - எபே.4:28
- ✦ பாவிகளே உங்கள் கைகளை சுத்திகரியுங்கள் - யாக்.4:8
- ✦ தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது - லூக்.3:17
- ✦ ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும் படிக்கு, அவருடைய
  பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் - 1பேது.5:6

# விசுவாசத்தில் ஸ்திரமாய்கட்டப்படுதல்

# Grounded in the Faith

## J.C.Choate



முதல் நூற்றாண்டில் ஒருவன் இரட்சிக்கப்படும்படிக்கு சுவிசேஷத்தை (அதாவது 1கொரி.15:1-4-ல் விவரிக்கப் பட்டுள்ளபடி கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்) கேள்விப் படுதல் அவசியாமாயிருந்தது. ஏனென்றால் (மாற்.16:15; ரோம.10:17) விசுவாசம் இருதயத்தில் உருவாக வேண்டுடிருந்தது (ரோம.10:10, எபி.11:6). இது ஒருவனை தன் பாவங்களுக்காக மனந்திரும்பவும் (அப்.2:38, அப்.17:30), கிறிஸ்து தேவனுடைய குமாரன் என அறிக்கையிடவும், பாவமன்னிப்பிற்கென்று, அல்லது இரட்சிக்கப் படும்படிக்கு ஞானஸ்நானம் பெறும்படி (அப்.2:38; மாற்.16:16) வழிநடத்திச் சென்றது.

இரட்சிக்கப்படும்படிக்கு தேவன் ஜனங்களைக் கேட்டுக்கொள்கிற காரியங்கள் இவைகள் என உறுதிப்படுத்தும் வண்ணமாக 14 மனந்திரும்புதலின் நிகழ்ச்சிகள் அப்போஸ்தலர் புத்தகத்தில் காணப்படுகின்றன. இப்புத்தகம் முழுவதும் வாசித்து உமக்கென்றுள்ள உண்மையை அறிந்துகொள்ளுங்கள். சபையின் ஆரம்பநாட்களில் இரட்சிக்கப்படும்படி ஒரே ஒரு வழி மட்டும் இருந்தது எனவும் மேலும் இன்றும் இரட்சிக்கப்படும்படிக்கு ஒரே ஒரு வழி மட்டும் இருக்கிறது எனவும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

நாம் தேவன் தம்முடைய வசனத்தில் என்ன சொல்லுகிறார் என படித்து புரிந்துகொள்ள வேண்டும். இரட்சிப்பு எனபது அறிவீனம் அல்லது தவறான அடிப்படையில் அல்லாமல் சத்தியத்தை அறிகிற அறிவு மற்றும் கீழ்ப்படிதலின் அடிப்படையில் ஏற்படுகிறது. ஒருவன் எதிர்பாராதவிதமாக கிறிஸ்தவனாக மாறி கர்த்தருடைய சபையின் அங்கத்தினனாகிறதில்லை. அவன் எப்படியோ மனிதபுத்திக்கு எட்டாத விதமாக, கண்டுபிடிக்கும்படிக்கு ஒரு நாளில், தேவனுடைய பிள்ளையாகவும் கர்த்தருடைய குடும்பத்தில் அங்கத்தினனாகவும், ஆகிவிடுகிறதில்லை. மாறாக, அவன் சத்தியத்தை கற்றறிந்தவனாகவும், தேவனுக்குக் தன்னுடைய கீழ்ப்படிதலில் தான் உண்மையாக என்ன செய்தான் என்பதையும் அறிந்தவனாகவுமிருக்கிறான்.

இது எளிமையாக்கப்பட்டதாகவும் மிகவும் ஆரம்பநிலையாகவும் இருக்கலாம், ஆனால் கர்த்தர் கற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து திறமைகளின் அடிப்படையில் சகல ஜனங்களோடு இடைபடுகிறார். எந்த மனிதனும் தன்னுடைய

சரியான மனதில் புரிந்துகொண்டு அதற்கு பதிலளிக்கக் கூடிய வகையில் அவர் சுவிசேஷத்தையும் இரட்சிப்பின் திட்டத்தினையும் மிக எளிதாக உருவாக்கினார். இதைப்போல தீர்க்கன், "அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசை கெட்டுப்போவதில்லை" (ஏசா.35:8) என எழுதினார்.

கேள்விப்படுதலில், புரிந்துகொள்ளுதல் மேலும் தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொள்ளுதலில், ஒருவன் உறுதியாக நாட்டப்பட்டு சத்தியத்தில் ஊன்றக் கட்டப்பட்டவனாக மாறுகிறான். அவன் இயேசு கிறிஸ்துவாகிய கன்மலையில், உறுதியாக அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டதாயிருக்கிற கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினனாக மாறுகிறான் (மத்.16:18; 1கொரி.3:11).

மத்தேயு13-ல் விதை விதைக்கிற உவமையில், இயேசு அது மிகவும் அவசியமாயிருந்த போதிலும் விதை விழுந்து முளைத்து பலன் கொடுப்பதற்கு இது போதுமானதல்ல என்ற உண்மையினை வலியுறுத்தினார். அது அதிகமாக அறுவடை பலனைக் கொடுக்கும்படி அது நல்ல இருதயத்தில் விழுந்து, வளர்ந்து முதிர்ச்சியடைய வேண்டியிருந்தது.

விதைப்பட்டுள்ள ஆவிக்குரிய விதை நிலைத்திருந்து விருத்தியடையும்படி பராமரிக்கப்பட வேண்டும். அப்படிச்செய்தால் மட்டுமே அறுவடை செய்ய இயலும். ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில், அவன் இரட்சிக்கப்பட்டிருப்பது மட்டுமே முக்கியமானதாக இருக்கக் கூடாது, ஆனால் அவன் இரட்சிப்பில் நிலைத்திருக்க வேண்டும். ஏனென்றால், இரட்சிப்பைக் கொண்டு வரும் அடிப்படைக் கட்டளைகளுக்கு ஒருவன் கீழ்ப்படிந்த பிறகு, அவன் கிறிஸ்துவை தொடர்ந்து பின்பற்றவும், அவருடைய போதனைக்குக் கீழ்ப்படியவும், மரணபரியந்தம் அவருக்கு உண்மையாயிருக்கவும் வேண்டும் (வெளி.2:10).

கிறிஸ்தவர்கள் **விசுவாசத்தில் ஸ்திரமாய் கட்டப்பட்டிருக்க வேண்டும்** என்பது இதன் பொருளாகும். பவுல் கொலோசெய சபை சகோதரர்க்கு இந்த வார்த்தைகளை எழுதினார்: " நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்களுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்" (கொலோ.1:23,24).

ஆனால் விசுவாசத்தில் ஸ்திரமாய் கட்டப்படுதல் என்பதின் பொருள் என்ன? இதன்பொருள், முதலாவது ஒருவன் முதன்மை மூலைக்கல்லாகிய இயேசுகிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டவனாயிருக்க வேண்டும். மேலும் அவன் சத்தியத்திற்கு (ஆதாரமும்) ஸ்திரமும் தூணுமாகிய சபையின் அங்கத்தினனாக மாறினவனாயிருக்கிறான் எனப் பொருள்படுகிறது (1தீமோ.3:15).

ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறவன் இப்போதிருந்து தான் தொடந்து வளரும்படிக்கு தேவனுடைய வார்த்தையைத் தொடந்து வாசிக்க

வேண்டியவனாயிருக்கிறான் என்று பொருள். தன்னுடைய ஆத்மா தேவனுடைய சித்தத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது எனவும், அவன் கர்த்தரிடத்தில் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான் எனவும் பொருள்படுகிறது. அவன் தான் யார் என்பதையும், தான் எப்படியிருக்கிறான் என்பதையும், என்ன போதிக்கவேண்டும் என்பதையும், அவன் எப்படி வாழவேண்டும் என்பதையும் அவன் எங்கே போகின்றான் என்பதையும் அவன் அறிகிறான். அவைகளில் சந்தேக மில்லை, சந்தேகத்திற்கு இடமுமில்லை. அவன் குற்றமற்றவன் அல்ல, ஆனால் அவன் குற்றமற்ற ஒருவரை பின்பற்றுகிறான். கிறிஸ்துவுக்குள் அவன் பரலோகத்திற்கு கொண்டுசெல்லுகிற குறுகலான வழியில் செல்கிறான்.

ஒருவன் விசுவாசத்தில் ஸ்திராமாய் கட்டப்பட்டிருக்காவிட்டால், அவன் தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே இங்கும் மங்கும் அலைகளைப்போல அடிப்பட்டு அலைகிறவனாயிருப்பான் (எபே.4:14), மேலும் சோதனை வரும் நேரத்தில் விசுவாசமற்றவனாக மாறிவிடுவான். அப்படிப்பட்ட மனிதன் தொடந்து நிலைத்திருக்கக் கூடாமல், அவனால் கர்த்தருடைய சபை தூஷிக்கப்படும். மாறாக, சத்தியத்தில் ஸ்திரமாகக் கட்டப்பட்டுள்ள ஒருவன் நிலைத்திருக்கிறான், உண்மையுள்ளவானாயிருக்கிறான் எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆயத்தமுள்ளவனாயிருக்கிறான். இவன் இரட்சிக்கப்பட்டிருப்பது மட்டும் அல்ல, இரட்சிப்பில் நிலைத்திருந்து, சத்தியத்திற்காக நின்று நல்மாதிரியை உருவாக்கி, நற்கனி கொடுத்து, முடிவிலே பரலோத்திற்குச் செல்ல விரும்புகிறான்.

விசுவாசத்தில் ஸ்திரமாகக் கட்டப்பட்டவர்கள் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள். அவர்கள் உலகத்தை மாற்றுவார்கள். நீங்கள் விசுவாசத்தில் ஸ்திரமாகக் கட்டப்பட்டிருக்கிறீர்களா?

**தெரிந்து கொள்ளுங்க**

- போதைப் பொருளால் பாதிக்கப்படும் உறுப்பு - நடுநரம்பு மண்டலம்
- முதன் முதலாக கண்டு பிடிக்கப்பட்ட எதிர் உயிரி - பென்சிலின்
- விரைவாக சுருங்கிவிரியும் ஆற்றலுடைய தசை - இதயதசை

***ஜெபியுங்கள்***

இந்தியாவிலே அநேக திருச்சபைகள் எழும்ப ..........

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி நிலைமாற ..........

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் 16-வது வாசகர்கருத்தரங்கிற்காக .........

**மருத்துவ ஆலோசனை**

"உன் வஸ்திரங்கள் எப்பொழும் வெண்மையாயும், உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக" (பிர.9:8).

# சந்திப்போம்! சிந்திப்போம்!

D.எபிநேசர்

உரையாடல் - 25

தாவீது : தேவாலயத்தின் பிரம்மாண்டத்தைப் பற்றிக் கேட்டிருந்தாயல்லவா? தற்போது நீ பார்த்து பிரமிக்கிற தேவாலயங்களைவிட மிக பிரம்மாண்டமான ஆலயத்தை சலொமோன் இராஜா கட்டினார். அதன் மகிமையை 2நாளா3:3 5:14 வசனங்களில் காணலாம். ஆனால் அப்படிப்பட்ட ஆலயத்தைக்குறித்து ஆண்டவர் என்ன சொல்கிறார் என்பதைக் கவனி (யோவா.2:19).

யோனத்தான்: அந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள் மூன்று நாளைக்குள்ளே எழுப்புவேன்

தாவீது: அதாவது யூதர்கள் மகிமை நிறைந்ததாய்க் கருதிக் கொண்டிருந்த அந்த ஆலயத்தைவிட மகிமை நிறைந்த ஆலயத்தைக் கட்டுவேன் என்றார்.

யோனத்தான்: அதெப்படி மூன்று நாளைக்குள்ளே ஒரு ஆலயத்தை எழுப்ப முடியும்?

தாவீது: அவர் சொன்னபடி கி.பி.33 ம் ஆண்டு அந்த ஆலயத்தை எழுப்பிக் கட்டினார்.

யோனத்தான்: ஆச்சரியமாயிருக்கிறதே! இப்போது அந்த ஆலயம் எங்கே இருக்கிறது?

தாவீது: நீ இப்போது ஆராதித்துக் கொண்டிருக்கிறாயே, அதுதான் அந்த ஆலயம். அவருடைய ஆலயம் உலகம் முழுவதும் இருக்கின்றன.

யோனத்தான்: என்னப்பா சொல்கிறாய்? சற்று புரியும்படியாய் சொல்!

தாவீது: யோவா.2:21 ம் வசனத்தைப் படி உனக்கே புரியும்.

யோனத்தான்: "அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார்"

தாவீது: ஆம் யோனத்தான். அவர் ஒரு கட்டிடத்தைப்பற்றிப் பேசவில்லை. தன் சரீரமாகிய ஆவிக்குரிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். யூதர்கள் அவரை சிலுவையில் ஒப்புக்கொடுத்தார்கள். மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். மூன்றாம் நாளில் உயிரோடெழுந்தார். அதைத்தான் அவர் "இடித்துப்போடுங்கள், நான் மூன்று நாளில் எழுப்புவேன்" என்றார்.

யோனத்தான்: அப்படியானால் ஒரு கட்டிடத்திற்கு எந்த முக்கியத்துவமும் இல்லையா?

தாவீது: இந்த கேள்வியோடு நீ காத்திரு அதற்கான பதிலோடு உன்னை மீண்டும் சந்திக்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.....

சிறுவர் பகுதி

# சரடு

**வேதவாசிப்பு: ஆதியாகமம்14:21-24**



ஆபிரகாமைப் பற்றி நாம் அநேகமுறை கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் நம் விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். நம்முடைய தேவனாகிய கர்த்தர் இந்த ஆபிரகாமை அபரிவிதமாக ஆசீர்வதித்திருந்தார். எப்படியென்றால் "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வத்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்". இந்த ஆசீர்வாதத்துக்கு ஆபிரகாம் பாத்திரவனாயிருந்தார். சரி என்ன சரடு என்று கேட்கிறீர்களா? ஆபிரகாம் பிறனுக்குள்ள ஒரு சாதாரண சரட்டைக் கூட இச்சிக்கவில்லை.

சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத்தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப்பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும பாதரட்சையின் வாரையாகிலும் உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார்.

பொருள்கள் என்றால் நமக்கு கொள்ளை ஆசை. இதைத்தா அதைத்தா என்று இருக்கிற எல்லாவற்றையும் கேட்டுவாங்கிவிடுவோம். ஆனால் ஆபிரகாமோ அப்படியில்லை. கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார். ஏன் நாமும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்காது நம்முடைய தேவனுக்கு நேராக ஜெபித்து பெற்றுக்கொள்ளக்கூடாது? முடியும் இல்லையா? அப்படியானால் நாமும் விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமைப்போல பிறனுக்குள்ள ஒரு சின்ன பென்சிலைக்கூட எடுத்துக்கொள்ளாமல் தேவனிடத்தில் கேட்போம். அவர் ஆபிரகாமை ஆசீர்வதித்தது போல நம்மையும் ஆசீர்வதித்து வழிநடத்துவார்.

**மனப்பாட வசனம்**

"வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்" (ஆதியாகமம்14:23)

பாடம் - 6

# சபையின் ஆளுகை அமைப்பு
# ORGANIZATION OF THE CHURCH

**J.C.Choate**

கிறிஸ்து சபையை ஸ்தாபித்தார் (மத்.16:18). அந்த சபை உலகெங்கிலும் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் (கொலே.1:13.14). இது இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டது (அப்.2:47). இது அவருடைய ஆவிக்குரிய சரீரம் (கொலே.1:18) இது ஒரே சரீரமாயிருக்கிறது (எபே.4:4).

சபை என்பது உலகளாவிய ரீதியில் பேசப்பட்டாலும் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான பிராந்தியங்களைக் கொண்டு அமைவுபெற்றதும். ஒவ்வொரு பிராந்திய சபையும் தனித்தனி அங்கத்தினர்களைக் கொண்டதுமாயிருக்கிறது. சபை என்பது தேசீய ரீதியாகவோ, அகில உலக ரீதியாகவோ அமைவுபெற்ற ஆளுகைக்குட்படாமல் அந்தந்த பிராந்தியங்களின் சுய ஆளுகைக்கு உட்பட்டது என்பது இதன் பொருள். பிரிதொரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால், கர்த்தருடைய சபைக்கு பூமிக்குரிய தலைவரோ, தலைமையகமோ இல்லை.

கிறிஸ்துவே சபைக்குத் தலைவராயிருக்கிறார் என்று வசனம் போதிக்கிறது. பின்வரும் வசனங்களை ஆராய்வோமாக, "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே.1:22,23). "கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்" (எபே.5:23). "அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலே1:18). இந்த வசனங்கள் நமக்குப் போதிப்பது என்ன? ஏற்கனவே குறிப்பிட்டபடி கிறிஸ்து சபையாகிய சரீரத்துக்கு தலையாயிருக்கிறார். எத்தனை தலைகள் உள்ளன? ஒரே தலை. அந்த ஒரே தலை கிறிஸ்து. அவர் அந்த ஸ்தானத்தை ஒருவரோடும் பகிர்ந்து கொள்வதில்லை.

சபை அநேக பிராந்திய (உள்ளூர்) சபைகளையும், கிறிஸ்துவையே தலையாகவும் கொண்டுள்ளது. அதாவது அவரே ஒவ்வொரு பிராந்திய சபைக்கும் தலையாயிருக்கிறார். அதுபோலவே சபையில் உள்ள ஒவ்வொருத் தனித்தனி அங்கத்தினர்களுக்கும் அவர் தலையாயிருக்கிறார். இதைக் கொண்டுதான் பவுலும், "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும் ஸ்திரீக்குப் புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள் அறிய வேண்டுமென்று விரும்புகிறேன்" என்று எழுதுகிறார் (1கொரி.11:3).

அடுத்து ஒவ்வொரு பிராந்திய சபையும், தனது சொந்த ஆளுகை (நிர்வாக)

அமைப்பைப் பெற்றிருக்கவேண்டும். பிறகு கிறிஸ்துவைத் தலையாகக் கொண்டு, அங்கத்தினர்களிலிருந்து மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் நியமித்து சபையின் ஆவிக்குரிய மற்றும் சரீரத் தேவைகளைக்குறித்து கவனம் செலுத்தவேண்டும். மூப்பர்கள் அங்கத்தினர்களின் ஆத்துமாக்களைக் குறித்து விழிப்புள்ளவர்களாய் இருக்கவேண்டும் (எபி.13:7). உதவிக்காரர்கள் மாம்சத்திற்குரிய காரியங்களைக் கவனித்துக் கொள்ளவேண்டும் (அப்.6). ஒவ்வொரு பிராந்திய சபையிலும், மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் பன்மையிலேயே வேதவசனம் பேசுகிறது. ஒரு மூப்பனோ அல்லது ஒரு உதவிக்காரனோ அவர்களை ஆளும்படி நியமிக்கப்படுவதில்லை என்பதை கவனிக்கவும், அல்லது ஒரு பிராந்திய சபையில் இருக்கும் மூப்பர்களும் உதவிக்காரார்களும், மற்றொரு பிராந்திய சபையின் மீது கட்டுப்பாடு விதிக்க இயலாது. பிராந்திய சபைகள் ஒன்றுக்கொன்று ஐக்கியம் கொண்டிருக்கலாமேயன்றி ஒன்றின் மீது மற்றொன்று ஆதிக்கம் செலுத்த இயலாது.

மூப்பர், மேய்ப்பர், (பாஸ்டர், செப்பர்டு) கண்காணி (பிஷப், பிரிஸ்பட்டர்) ஆகிய அனைத்து வார்த்தைகளும் ஒரு அலுவலையே குறிக்கும். இப்படியாக ஒரு மூப்பரே மேய்ப்பராகவும் (பாஸ்டர்) கண்காணியாகவும் (பிஷப்பாகவும்) இருக்கிறார். 1தீமோ.3:1-7-ல் பவுல் இவர்களுக்குரிய அநேக தகுதியாம்சங்களைக் குறிப்பிடுகிறார். "கண்காணிப்பை விரும்புகிறவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்கவேண்டும். அவன் மதுபான பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல் , பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசை இல்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளை சகல நல்லொழுக்கமுள்ளவர்களாய் கீழ்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதனசீஷனாயிருக்ககூடாது. அவன் நிந்தையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்". இந்த தகுதியாம்சங்கள் தீத்.1:5-9-லிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே சபையிலே ஒவ்வொருவரும் மூப்பராக இருக்க முடியாது. தகுதிபெற்றவர்கள் மாத்திரமே, அதுவும் (ஒரு பிராந்திய சபையில்) ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களே மூப்பர்களாக நியமிக்கப்பட வேண்டும். மூப்பர்களுக்குரிய தகுதி பெறாத பிராந்திய சபைகள் இருக்குமாயின், அந்தந்த சபைகளின் ஆண் அங்கத்தினர்கள், மூப்பர்களை நியமனம் செய்கிற அளவுக்கு, வளர்ச்சி அடையும் வரை, சபையின் காரியங்களை கவனித்துக் கொள்ளவேண்டும்.

மூப்பர்களுடன் ஊழியம் செய்யத்தக்க வகையில் உதவிக்காரர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவர்களும் ஊழியர்களாக இருப்பதால், பிராந்திய மூப்பர்களின் வழி காட்டுதலின் பேரில் ஊழியம் செய்ய வேண்டும். பவுல்

அவர்களின் தகுதியாம்சங்களை பட்டியலிட்டு காட்டுகிறதாவது " அந்தப்படியே, உதவிக்காரர்களும் இரு நாக்குள்ளவர்காளயும், மதுபானப் பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்தமனச் சாட்சியிலே காத்துக் கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும். மேலும் இவர்கள் முன்னதாக சோதிக்கப்படவேண்டும். குற்றஞ்சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ் செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும், நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறு பண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலும் உண்மையுள்ளவர்களாயுமிருக்க வேண்டும். மேலும் உதவிக்காரரானவர்கள், ஒரே மனைவியை உடைய புருஷராய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும். இப்படி உதவிக்காரர்களுடைய ஊழியத்தை நன்றாய் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்" (1தீமோ.3:8-13).

இதுவே சபையின் தெய்வீக ஆளுகை அமைப்பு. கிறிஸ்து இதற்குத் தலையாயும், ஒவ்வொரு பிராந்திய சபையும் தங்கள் மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் கொண்டு அமைவு பெறுகிறது. அவர்களின் அதிகாரத்தின் கீழ், பிரசங்கியார்களும், போதகர்களும், அங்கத்தினர்களும் ஊழியஞ் செய்கின்றனர். கர்த்தருடைய நாளிலே ஒரு பிராந்தியசபை இடறி விழுந்தாலும் பிற பிராந்திய சபைகள் தொடந்து விசுவாசத்திலே நிலைத்திருக்கக் கூடும். அல்லது (அந்த) ஒரு பிராந்திய சபையை விடுத்து அனைத்து பிற பிராந்திய சபைகளும் வழுவிபோனாலும், அந்த ஒரு பிராந்திய சபையாகிலும் விசுவாசத்தில் தரித்திருக்கும். கர்த்தருடைய ஆளுகை அமைப்புத் திட்டத்தின் படி, ஒவ்வொரு பிராந்திய சபையும் பிற பிராந்தியங்களிலிருந்து தன்னாட்சி அல்லது சுயாட்சி அமைப்பைப் பெற்றவை. அவைகள் மனிதனால் இயற்றப்பட்ட சட்டங்களினாலே அல்ல, ஆனால் அன்பினாலே கட்டப்பட்டிருக்கும் அதினால் அவைகள் ஒன்றுக்கொன்று ஐக்கியத்திலும், ஒன்றாக இணைந்து ஊழியஞ் செய்வதிலும், கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாட்டில் இணைந்திருக்கவும் செய்யும் அவரது வழி மேற்கொண்டு கூட்டப்பட வேண்டியதில்லை.

சபைக்கு பேதுருவோ வேறு எந்த மனிதனுமோ தலைவராக செயலாற்றியதாக வேத வசனங்களில் எங்குமே நாம் வாசிப்பதில்லை. ஒரு கண்காணி (பிஷப்) அநேக பிராந்திய சபைகளுக்கு மேலாக ஆட்சி செலுத்தினதையோ அல்லது ஒரு 'பாஸ்டர்' (பிரசங்கியார்) ஒரு சபைக்கு தலைவராக பணியாற்றியதாகவோ நீங்கள் வசனங்களில் வாசிக்க இயலாது. மதத்தலைவர்களென்றோ, (சபை குருமார்கள்) சமய அறிவு பெறாத பொதுமக்களென்றோ நீங்கள் வாசிக்க இயலாது. இன்றுள்ள மதவுலகில் தேவன் கொடுத்த சபையின் ஆளுகை அமைப்பிலிருந்து வழுவிப்போனதே, உலகின் அநேகப் பிரிவினைகளுக்கு ஒரு காரணமாகும். எனவே சபையின் ஆளுகை அமைப்பின் உண்மையான முன்மாதிரிக்குத் திரும்ப தீர்மானம் செய்வோமாக.

## கேள்விகள்

தயவு செய்து பின் வருவனவற்றிற்கு சரியான பதிலைக் கொடுக்கவும்:

1. சபையை கட்டியது யார்? ----------------------------------------
2. சபை எதினால் கட்டப்பட்டது? ----------------------------------------
3. கிறிஸ்துவின் சரீரம் மாம்சத்திற்குரியதா? ஆவிக்குரியதா? ------------
4. எத்தனை சபைகள் உள்ளன? ----------------------------------------
5. ஒரே சபை என்பது ------------------------ ரீதியில் பேசப்படுகிறது.
6. சபை நூற்றாக்கணக்கான ஆயிரக்கணக்கான ------------------------ கொண்டுள்ளது.
7. சபையின் ஆளுகை அமைப்பு, பிராந்தியங்கள் வாரியாகவோ, தேசிய ரீதியாகவோ அல்லது அகில உலக ரீதியாகவோ, எப்படி அமைவு பெற்றது? ------------------------------------------------------------
8. கர்த்தருடைய சபைக்கு தலைவரோ தமையகமோ உண்டா? ---------
9. சபைக்கு தலைவர் யார்? ----------------------------------------
10. பிராந்திய சபையின் முன்னோடிகள் (நடத்துனர்கள்) என்னவென்று அழைக்கப்பட்டனர்? ----------------------------------------
11. மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் சேவை என்ன? ---------------
12. ஒவ்வொரு பிராந்திய சபையிலும் எத்தனை மூப்பர்களும், உதவிக்காரர்களும் இருக்க வேண்டும்? ------------------------------
13. மூப்பர்கள் வேறு என்ன பெயரில் அழைக்கப்பட்டனர்? ---------------
14. மூப்பர்களின் தகுதியாம்சங்கள் எங்கே பட்டியல் இடப்பட்டுள்ளது? -----
15. உதவிக்காரர்களின் தகுதியாம்சங்கள் எங்கே பட்டியலிட்டுள்ளன?-----
16. தகுதி பெற்ற அங்கத்தினர்கள் ஒரு பிராந்திய சபையில் இல்லமலிருந்தாலும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களை நியமிக்கலாமா? ----------------------------------------
17. மேற்கண்ட நிலையில் யார் சபையை நடத்தவேண்டும்? -------------
18. பிராந்திய சபைகள் எந்த ரீதியில் ஒருங்கிணைந்துள்ளன? ------------
19. தேவனுடைய ஆளுகை அமைப்புக்கு மேல் எதுவும் செயல்படுத்தப்படலாமா? ----------------------------------------
20. வசனத்தின்படி பேதுரு சபைக்கு தலைவராக இருந்தாரா? -----------
21. பிஷப் என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஒரு மனிதன் அநேக பிராந்திய சபைகளுக்கு மேலான அதிகாரியாக இருந்ததாக வேதத்தில் வாசிக்கிறோமா? ----------------------------------------
22. ஒரு பிராந்திய சபைக்கு தலைவராக பாஸ்டர் என்பவர் செயல்பட்டதாக வாசிக்கிறோமா? ----------------------------------------
23. மத குருமார்களென்றும், சபை அறிவு பெறாதபொதுமக்களென்றும் கூறப்படும் பிரிவு குறித்து வாசிக்கிறோமா? --------------------------
24. இன்று உலகில் அநேக பிரிவினைகள் இருப்பதற்கு காரணம் என்ன?-
25. சபையின் ஆளுகை அமைப்பை முறைப்படி அறிய நாம் எங்கே திரும்ப வேண்டும்? ----------------------------------------

**selected**

# நான் மன்னிக்க மாட்டேன்

# I Won`t Forgive

*-Betty Burton Choate*



உலகில் சந்தோஷத்துடனிருப்பதைவிட கோபத்துடனிருப்பதையே நல்லதென்று தெரிந்தெடுக்கிற ஜனங்கள் காணப்படுகின்றனர், ஜனங்கள் மன்னிப்பதை விட பொறாமையையே சுமந்து கொண்டிருக்கிறவர்களாக காணப்படுகின்றனர். எப்படியோ தங்களை வேதனைப்படுத்தியவர்களை அல்லது தங்கள்மேல் கோபங்கொண்டவர்களை தங்களுடைய பழிவாங்கும் செயலால் வஞ்சம் தீர்த்துக்கொள்ளுகின்றனர், மன்னிப்பதற்கு மறுக்கின்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இப்போது இரு நபர்களை பார்ப்போம்: முதலாவது, நண்பர் எண்1 அறிந்தோ அல்லது அறியாமலோ நண்பர் எண்2 வுக்கு ஏதோ தீங்கிழைத்து விட்டான். பாராமுகமாக, அவன் தவறிற்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளான், எனவே அவன் மன்னிப்பு கேட்கிறான். ஆனால் நண்பர் எண்2 கோபத்தினை வெடிக்கச் செய்து மன்னிக்க மறுக்கின்றான்.

இப்போது என்ன சம்பவிக்கிறது? நண்பர் எண்1 ஐக்கியத்தினை தக்கவைத்துக் கொள்ள விரும்பமுடையவனாயிருக்கிறான், அவன் இயல்பான முறையில் நடந்துகொள்ள முயற்சிக்கிறான், பேசுகின்றான், சிரித்துக்கொள்ளுகின்றான், ஆனால் பலனில்லை. காலம் கடந்த செல்லுகையில், அவன் தன் வாழ்க்கையில் மற்றவர்களோடு உறவினை அமைத்துக்கொள்ளுகின்றான், கொஞ்சங் கொஞ்சமாக நண்பர் எண்2 ஐ மறக்கின்றான். அவன் அவனைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்ட போது, அவனுடைய கண்களில் எரிக்கின்ற தனல்போன்ற கோபத்தைக் கண்டு கசப்பான உணர்வுகள் இன்றும் உண்டென ஞாபகப்படுத்தப்பட்டு காரியங்கள் சரியாக வில்லையென அவன் வருத்தப்படுகிறான். ஆனால் பல முறை கடந்த பிரச்சனைகள் மேலும் நண்பன் எண்2 மறக்கப்படுகின்றன. பிறகு நண்பன் எண்2 ன் நிலை என்ன? அவன் தன்னுடைய கோபத்தை, தன் கசப்பினை, தான் இந்நிலைக்குள்ளாகும்வரை தன் நண்பன் மேல் தீர்க்கஷ்டமான பிரச்சனையை வளர்த்திருக்கிறான். அவன் கோபத்துடனே தன் படுக்கைக்குச் செல்கிறான் கோபத்துடனே தன் படுக்கையைவிட்டு எழுகிறான். எப்பொழுதெல்லாம் அவன் நண்பன் எண்1 ஐ நினைக்கிறானோ? அப்பொழுதெல்லாம் அவனுக்குள்ளாக

ஆத்திரமூட்டும் அலை மென்மேலும் எழுவதை அவன் உணர்கிறான். தன் நண்பன் மேலுள்ள தன்னுடைய சகிக்கமாட்டாத இயல்பு அவனுடைய பெருமைக்குரிய தனித்தன்மையோடே ஊடுருவுகிறது. அதனால் அவன் மிகக் கோபக்காரனாக மாறி, 'தன்னைக் கோபமூட்டுகிற' எவரையும் சகிக்கமாட்டாதவனாக மாறிவிடுகிறான். அவனுடைய வாழ்க்கை சிறிய மற்றும் பெரிய மோதல்களினாலும் எரிச்சல்கள் மற்றும் வெறுப்புகளினாலும் ஏற்படும் பிரிவினால் வளருகிறது.

அவன் மன்னிப்பைக் குறித்ததான ஒரு உபதேசத்தைக் கேட்கிறான். இயேசு, "..... மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்......" (மத்.6:14,15) எனச்சொன்னார். ஆனால் அவன் நண்பன் எண்1 னுடைய வெட்கங்கெட்ட, வேண்டுமென்றே செய்த குற்றத்திற்கு எதிரான தன்னுடைய சிறிய மற்றும் நியாயமான முன் கோபத்தினை நிறுத்துப்பார்த்து, அப்புறம் அவன் தன்னுடைய சூழ்நிலைக்கு இந்த எச்சரிப்பினை செயல்படுத்த இயலாது என தீர்மானிக்கிறான். எனவே அவன் தன்னுடைய எரிச்சலை விடாதிருக்கிறான். மன்னிக்காத ஜனங்களுக்கு **உணர்வுபூர்வமாக** என்ன நடக்கிறது? அவர்கள் முன்கோபக்காரர்களாக மாறுகின்றனர், ஒத்துப்போக கஷ்டப்பட்டுக்கொண்டு அவர்கள் சந்தோஷமற்ற வாழ்க்கை வாழ்கின்றனர். தங்களுடைய சந்தோஷமின்மையால், அவர்கள் தங்களோடு அனுதினமும் நெருக்கமாக தொடர்புகொள்ளுபவர்களை விசனப்படுத்துகின்றதும், எதிப்பாராத மற்றும் கோபகொள்ளாதவர்கள்மேல் கோபத்தைக் காட்டுகிறான்.

✦ மன்னிக்காத ஜனங்களுக்கு **சரீரப்பிரகாரமாக** என்ன நடக்கிறது?

அவர்கள் விபரீதமான உடல்நல பிரச்சனைகளாகிய அதிகமனஸ்தாபம், கோபம், மாரடைப்பு, பெருங்குடல் புண், மூட்டுவலி மேலும சரீர அழுத்தத்தால் ஏற்படும் விபரீதமான நிலைகள் மற்றும் கோபத்தின் மூலம் சரீரத்தில் விரோதம் வெளிப்படுதல் போன்றவற்றினால் அவதிப்படுகின்றனர்.

✦ மன்னிக்காத ஜனங்களுக்கு **சமூக சம்பந்தமாக** என்ன நடக்கிறது? மன்னிக்காத நபருக்கு நீண்டநாள் நட்பினை கொண்டிருப்பது கூடாத காரியமாயிருக்கும், மேலும் மன்னிக்கமுடியாத மனநிலையுடனிருப்பதால் குடும்ப அங்கத்தினர்களோடு கூட உறவுகொண்டிருப்பது கடினமாகயிருக்கும்

✦ மன்னிக்காத ஜனங்களுக்கு **ஆவிக்குரிய பிரகாரமாக** என்ன நடக்கிறது? இயேசு, "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்.6:15) என எச்சரிக்கிறார். இவைகள் வீணான வார்த்தைகளல்ல, ஒரு நாளில் நம்முடைய நியாயாதிபதியாக இருக்கப்போகிற நம்முடைய கர்த்தர் உருவாக்கின வாக்கு உறுதியாகும். "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ **மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.** மேலும் ஒரு

நாளைக்குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு; பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப் பண்ணினார், நாம், "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" என எச்சரிக்கப்படுகிறோம் (யோவா.12:48).

சங்கீதக்காரன் 34:11-18 வசனங்களில், "பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்; கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்.

"நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்? உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள். தீமையை விட்டு விலகி, நன்மைசெய்; சமாதானத்தைத்தேடி, அதைத் தொடர்ந்துகொள். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. தீமை செய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.

"நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுவிக்கிறார். நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" என எழுதினான்.

கோபத்தையும் விரோதத்தையும் கொண்ட தங்கள் இருதயத்தில் அன்பு வேர்விட்டு வளர சிறிய இடத்தையே கொடுக்கின்றார்கள். 1கொரி.13-ல் அன்பைப் பற்றிய பொக்கிஷங்கள் சில வசனங்களில் குறிப்பிடப்பட்டு, நம்முடைய வாழ்வில் அதனுடைய பலன்கள் பற்றியும் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. பின்வரும் இந்தக் கூற்றுகளை கவனத்துடனும் ஜெபத்துடனும் வாசியுங்கள்: "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப்புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது---"

ஒரு கசப்பான, ஆத்திரமூட்டக்கூடிய மன்னிக்காத மனநிலை தேவனால் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாயிருப்போமானால் ஒரு அன்பின் மனநிலையினால் அகற்றப்பட வேண்டும். விரோதத்தை மனதில் அடக்கிவைக்கிறவர்கள் தவறான எண்ணங்கொண்டு தாங்கள் மன்னிக்கமறுப்பதில் நியாயமிருக்கிறது என நினைக்கலாம். அவர்கள் தங்களை மனவேதனைப்படுத்தியவர்களின் குற்றங்கள் நீக்கப்படும்படிக்கு மிகப்பெரிதாகயிருக்கையில் தங்களுடைய பாவம்

சிறியதாயிருக்கிறது என்க் கருதலாம். ஆனால் தேவனுடைய அளவை வித்தியாசமாயிருக்கிறது. யாரோ ஒருவர் மற்றவருக்கு விரோதமாக தவறிழைத்துவிட்டால், அவன் மனந்திரும்பி மன்னிப்புக் கோருகிறார், அவனுடைய இருதயம் தாழ்மையுள்ளதாயும் தேவனுக்கு முன்பாக மனஸ்தாபப் படுகிறதாயுமிருக்கிறது. அவன் மன்னிக்கப்படுவான்.

எப்படியாயினும், ஒரு நபர் மற்றவரை மன்னிக்கமறுக்கும்போது, அவனுடைய மனநிலை தேவனுடைய பார்வையில் அவனுடைய பாவத்தை பெரிதாக்கும். 1யோவா.4:20,21 கூறுகிறது, "தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்".

நீங்கள் விரோதத்தினை அடக்கிவைக்கும் குற்றஉணர்வைக் கொண்டிருந்து உங்களுடைய மன்னிப்பைக் கோரியிருக்கின்ற நபரை மன்னிக்க மறுத்துக்கொண்டிருப்பீர்களானால், **உங்களுடைய தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுங்கள்.** நீங்கள் கடைபிடிக்கும் மார்க்கம் ஒருவனுடைய சரீரம் மற்றும் ஆவிக்குரிய அழிவை ஏற்படுத்துபவையாகும். உங்கள் தேவை, நீங்களே மனந்திரும்பி மன்னிப்பு கோரவேண்டுமென்பதே!

### *பொது அறிவுச் சோதனை*

1. தமிழ் நாட்டின் நுழைவாயில் எனப்படுவது எது?
   அ) சென்னை ஆ) கோவை இ) தூத்துக்குடி
2. இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?
   அ) வில்சன் ஆ) ஜோன்ஸ்சால்க் இ) லூயிஸ்
3. பசுமை புரட்சியின் தாயகம் எது?
   அ) மெக்ஸிகோ ஆ) தைவான் இ) தென்கொரியா
4. உலகின் முதல் செயற்கைகோளை உருவாக்கிய நாடு எது?
   அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா இ) ஜப்பான்
5. 9-வது ஆசிய கோப்பைபோட்டி எந்த நாட்டில் நடைபெறும்?
   அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) இலங்கை

*விடைகள்*
1. தூத்துக்குடி
2. ஜோன்ஸ்சால்க்
3. மெக்ஸிகோ
4. ரஷ்யா
5. பாகிஸ்தான்

**தீண்டாமை ஒரு பாவச்செயல்**
**தீண்டாமை ஒரு பெருங்குற்றம்**
**தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்**

## வேத அறிவுப்போட்டி எண் 48-ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. நன்மையைக் | - நீதி.17:20 | 6. தேவன் | - ரோம.15:6 |
| 2. விடுவிப்பார் | - சங்.72:12 | 7. மதிக்க | - 1தெச.5:12 |
| 3. ஆமான் | - எஸ்த.6:12 | 8. துன்பப்படுவார்கள்- 2தீமோ.3:12 | |
| 4. சூனேமியாளின் மகன் | - 1இராஜா.4:35 | 9. பரலோகத்தில் | -1பேது.1:5 |
| 5. விழத்தள்ளுவேன் | - ஒபதி.1:4 | 10. யோவான், காயுவுக்கு-3யோவா.2 | |

## வேத அறிவுப்போட்டி எண்48-ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| P.அலிஸ்மேரியம்மாள்- வதிலை | |
| K.பிரஜிதா | - ஈரோடு |
| V.சரவணக்குமார் | - செ.பாளை |
| G.மெர்சிரூபி | - கொடுவாய் |
| Mrs.வனிதாசாமுவேல் | - மதுரை |
| Mrs.ஜாஸ்மின்வின்சென்ட்ராஜ்-மதுரை | |
| J.S.நிர்மலாஜான் | - மதுரை |
| G.P.ஏசையன்ராஜ் | - கோபி |
| A.சேவியர்மேரி | - மதுரை |
| குளோரிபவுல்சர் | - சென்னை |
| Dr.ஜெயசிங் | - சென்னை |
| R.பிளசன் | -கன்னியாகுமரி |
| B.ஜெயராணி | - கன்னியாகுமரி |
| S.ஜெயராணி | - செ.பாளையம் |
| T.வேலுச்சாமி | - ஜே.பாளையம் |
| A.ராபர்ட்கிளைவ் | - மேகாலயா |
| G.கிரேஸ்ஜெயா | - வெள்ளகுளம் |
| IRA.எதிராசன் | - சங்ககிரி |
| V.ராதா | - எம்.ஜி.பாளையம் |
| P.கந்தசாமி | - கீரனூர் |
| J. ஜோதிவாசுகி | - செ. பாளை |
| R. பாரதி | - கோபி |
| R. சாமுவேல் | - ஊதியூர் |
| A. கந்தசாமி | - தெக்கலூர் |
| G. ஜெபஸ்டியன் | - செ.பாளை |
| D. பவுல் | - செ.பாளை |
| R. கலாவதிராஜா | - சத்திரப்பட்டி |
| P.S. லலிதாபிரேமகுமாரி-மதுரை | |
| V. கோவலன் | - மதுரை |
| S. அன்னாள் | - செ.பாளை |
| S. எஸ்தர்சேகர் | - கோபி |
| T. ஜெனிபிரதிபா | - மதுரை |
| S. செல்வராஜ் | - வெள்ளகோவில் |
| A. ஆனந்த் | - மதுரை |
| M. சேகர் | - மோதுப்பட்டி |
| Mrs.ராஜேஸ்வரி | -ராக்கியவலசு |
| A. பென்சன்பவுல் | - சில்லாங் |
| N. கமலவேணி | - சென்னை |
| M. சுதாகர் | - கொடுமுடி |
| E. டேனியேல் | - பள்ளபட்டி |
| R. ஸ்வாதிரவி | - ஈரோடு |
| M. முருகன் | - ஜே.பாளை |
| S.பேபிபுனிதாராணி- பொன்னமங்களம் | |
| R. பானுமதி | - ஜே.பாளை |
| P. ஸ்டெல்லா மார்கிரேட்-காங்கயம் | |
| S. பவுல் ராஜ் | - அம்பிளிக்கை |
| A. பிஜி | - செ.பாளை |

## வேத அறிவுப்போட்டியாளர் கவனத்திற்கு

✦20 வயதிற்கு உட்பட்டவர்கள் மட்டும் கலந்து கொள்ளவேண்டும்.
✦உங்களுடைய சொந்தக்கையாலே எழுதவேண்டும்.
✦ஒரு நபர் இரண்டு முகவரியில் எழுதக்கூடாது.
✦முகவரி தெளிவாக எழுதவேண்டும் இல்லையேல் நிராகரிக்கப்படும்.
✦காப்பி அடித்தால் கர்த்தர் காண்கிறார் என்ற உணர்வு இருக்கட்டும்.
✦ஒவ்வொரு மாதமும் 25-ம் தேதிக்குள் விடைகள் வந்து சேரவேண்டும்.

நன்றி - ஆசிரியர்

# வஞ்சிக்கப்படாதிருங்கள்
## Be not deceived

*J.குளோரி அர்ஜுனன்*

இன்றைய உலகம் அநேகரை வஞ்சிக்கின்றதாக காட்சியளிக்கிறது. இப்படிப்பட்ட உலகில் ஸ்திரீகளாகிய நாம் அநேகவிஷயங்களில் வஞ்சிக்கப்படுகின்றோம். நமது ஆதித்தாயாகிய ஏவாளும் கூட கண்களின் இச்சைக்கு இடமளித்து வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள், நாமும் கூட இந்த மாய உலகை இச்சித்து மாய்ந்து போய்விடக்கூடாது. கிறிஸ்தவ சகோதரிகளுக்கு வேதாகமத்தின் மூலம் எச்சரிப்பின் சத்தம் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. இச்சத்தத்திற்கு செவிசாய்ப்போமா?

**சாத்தானால் வஞ்சிக்கப்படுதல்:** சாத்தான் நம்மை வஞ்சிக்கிறவனாயிருக்கிறபடியால் சாத்தானால் நாம் வஞ்சிக்கப்டுகிறோம். ஏவாளை சர்ப்பம் வஞ்சித்தது என ஆதி.3:13-ல் வாசிக்கிறோம். ஏவாளின் பார்வைக்கு இன்பமாய் காட்சியளித்தது அந்த விலக்கப்பட்ட கனி. அதைப் புசித்தாள், மீறுதலுக்குட்பட்டாள் (1தீமோ.2:14). அவளுடைய கண்களின் இச்சை சாத்தானுக்கு இடமளிக்கச் செய்தது முடிவில் சர்ப்பம் வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள் (ஆதி.3:13). இதைப்போலவே பொருளாசையாகிய பிசாசு நம்மை வஞ்சிக்கிறது. ஆம், நமக்கு உலகப்பொருட்களின் மேல் அளவில்லா ஆசை ஏற்படுகிறது, அதை வாங்கலாமா? இதை வாங்கலாமா? என ஸ்திரீகள் அழிந்து போகும் பொருட்களின் மீது கண்களைப் பறக்கவிட்டு பொருளாசையில் பழகிபோய்விடுகின்றனர். இப்படி பொருளாசையில் பழகின இருதயமுடையவர்களை வேதம் சாபத்தின் பிள்ளைகள் (2பேது.2:14) என அழைக்கிறது. அன்பு சகோதரிகளே, நாம் ஆசீர்வதிக்கப்படவே அழைக்கப்பட்டுள்ளோம். பிசாசு நம்மை வஞ்சிக்க இடம் கொடாதிருப்போம். நம்முடைய நாட்டில் கறிக்கோழி வளர்ப்பது போல சில வெளிநாடுகளில் மாம்சத்திற்கென்று வெள்ளை பன்றி வளர்ப்பார்களாம். அவைகளை கசாப்புக் கடைக்குப் பிடித்து செல்லுவது மிகக்கடினமாம். எனவே அவைகளுக்குப்பிடித்தமான பீன்ஸ் பயிர்களை அவைகளுக்கு முன் அள்ளி இறைப்பார்கள், அந்த பன்றிகள் பீன்ஸ் பயிர்களால் ஈர்க்கப்பட்டு கசாப்பு கடைவரை இறைக்கப்பட்ட பயிர்களைத் தின்னும் ஆர்வத்தில் தங்களுடைய நிலையை அறியாமல் கசாப்பு கடைக்கே வந்து சேர்ந்துவிடுமாம். பார்த்தீர்களா! சகோதரிகளே உலகம் இப்படித்தான் பல பொருட்களின் மேல் ஆசைகொள்ளசெய்து நம்மை சாபத்திற்குள்ளாக்கிவிடும். சாத்தான் நம்மை வஞ்சிக்க இடங்கொடாது அவனுக்கு எதிர்த்து நிற்போமாக!

**நம்மை நாமே வஞ்சித்தல்:** சில வேளைகளில் நம்மைநாமே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். எப்போது தெரியுமா? நாம் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாத போது வஞ்சித்துக்கொள்ளுகிறோம். "--நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின் படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்.1:22). சிலர் வசனம்

இப்படியா இருக்கிறது என மனோவாஞ்சையாயிராமல், எங்களுக்குக் கர்த்தர் அதை வெளிப்படுத்தினார் இதை வெளிப்படுத்தினார் என தங்களுடைய இருதயத்தின் எண்ணங்களுக்கே இடமளித்து வஞ்சிக்கப்படுகிறார்கள். நம்முடைய நினைவுகள் கர்த்தருடைய நினைவுகள் அல்ல என்பதை மறந்து விடக்கூடாது, திருவசனம் சபை கூடிவருதலை வலியுறுத்துகிறது (எபி 10:25). ஆனால் நம்மில் எத்தனைபேர் இவ்வசனத்திற்குக் கீழ்ப்படிந்து வாரந்தோறும் சபைக்குச் சென்று தேவனை ஆராதிக்கிறோம்? போதாகுறைக்கு முகூர்த்தங்களெல்லாம் ஞாயிற்று கிழமையிலே நடக்கிறது. போகாவிட்டால் உறவினர்கள் கோபித்துக்கொள்வார்கள் என கர்த்தருடைய நாளை தங்கள் சொந்த நாளாக மாற்றிவிடுகின்றோமா? நாளானது சமீபித்து வருகிறதை பார்த்து சத்தியத்தை அறிந்து பின் மனப்பூர்வமாக பாவஞ்செய்து மோசம் போனால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். மேலும் கர்த்தருக்கு செலுத்த வேண்டியதை சபையில் செலுத்தாமலிருந்தாலும் நம்மை நாமே வஞ்சித்து அழிவை சம்பாதித்துக் கொள்வோம். சப்பீராள் என்ற ஸ்திரீ கர்த்தருடைய சமூகத்திற்குக் கொண்டு வந்து கொடுக்கவேண்டிய கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து கர்த்தருடைய ஆவியை சோதித்தபடியால் மரித்துப்போனாள். அன்பு சகோதரியே, நீ இன்று வாழும் வாழ்வு, உங்களுடைய சம்பத்துக்கள் எல்லாமே கர்த்தர் உனக்கு கொடுத்தவை என அறிவாயா? பரலோக ராஜ்யத்தின் பணிக்கென நீ கொடுக்காமல் பொருளாசைக்கு இடமளித்து உன்னை நீயே வஞ்சித்துக் கொள்ளாதே "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான் பெறுக விதைக்கிறவன் பெறுக அறுப்பான்" (2கொரி.9:6).

**மற்றவர்களை வஞ்சித்தல்:** கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைப்போல ஜீவிக்கிறவர்களாயிருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற அநேகர் மற்றவர்களை வஞ்சித்து தேவநாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குகின்றனர். வேதாகமத்தில் லாபான் என்றவன் யாக்கோபை வஞ்சித்தான் என வாசிக்கிறோம் (ஆதி.29:25). யாக்கோபு லாபானின் மகள் ராகேலை திருமணம் செய்யும்படி அவளுக்காக ஏழு வருஷம் லாபானிடம் வேலை செய்தான். ஏழு வருடம் முடிந்ததும் லாபான் ராகேலுக்கு பதிலாக தன் மூத்த மகள் லேயாளை மனைவியாகக் கொடுத்து வஞ்சிக்கிறான். நம்முடைய தேவனோ வாக்குமாறாதவர். அப்படியிருக்க நாமும் மற்றவர்களுக்கு ஏதாவது காரியத்தில் செய்வேன் என வாக்களித்துவிட்டு செய்யாமலிருப்போமானால் இந்த லாபானைப் போலும் "கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி" (நீதி.25:14) என்ற வசனத்திலுள்ளபடியும் இருப்போம். இப்படியிருப்பவர்களை வசனம் வஞ்சகன் என அழைக்கிறது. எனவே நாம் மற்றவர்களை வஞ்சியாதிருப்போமாக!

அன்பு சகோதரிகளே, வேதம் எச்சரிக்கிறபடி நாம் சாத்தான் நம்மை வஞ்சிக்க இடம் கொடாமலும், நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளாமலும், மற்றவர்களை வஞ்சியாமலுமிருந்து நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படி கிரியை நடப்பிப்போமாக!

# நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்

S.பிச்சை முத்து

அன்பிற்குரிய உங்கள் யாவருக்கும் கிறிஸ்துவின் இன்ப நாமத்திலே வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். செய்தியின் வசனப்பகுதி மத்.5:13-ல் உள்ளது. மத்.5:1-29 வரை நமதாண்டவரின் மிக அருமையான மலைப் பிரசங்கத்தின் வசனம்.

செய்தியின் உள்ளே செல்லும் முன்பு இப்புத்தகத்தின் ஆசிரியர்பற்றி சில காரியங்கள் (கி.பி.60-66). மத்தேயுக்கு லேவி என்கிற மறுபெயரும் உண்டு (மாற்.2:14). இவர் யூதர்களால் வெறுக்கப்பட்ட வேலையைச் செய்துவந்தார். அதாவது வரிவசூல் செய்யும் வேலை. ஆதலால் இவரை ஆயக்காரனாகிய மத்தேயு என்பர் (மத்.9:9). இப்புத்தகத்தில் பிரதானமாக யூதர்கள் எதிர்பார்த்திருந்த மேசியாதான் கிறிஸ்து என காண்பிக்கிறார்.

1. நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்.

இவ்வாக்கியத்தை இயேசு தனது பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்த மக்களைப் பார்த்துச் சொன்னார். இயேசு ஏன் சாதாரண உப்பை உதாரணபடுத்தினார். அற்பமான அதாவது வெகுசாதாரண காரியங்களை சொல்லி உன்னதமான காரியங்களை விளக்குகிறவர் நமது ஆண்டவர்.

தங்கம், வெள்ளி, வைரம், வைடூரியம், யஸ்பி, கோமேதகம், இரத்தினக்கல், இன்னும் அநேக விலைமதிப்புள்ள பொருள்கள் பூமியில் இருந்தாலும், ஏன் உப்பை உதாரணப்படுத்தினார்? ஒருவேளை இப்பொருட்களைப்பற்றி தெரியாத அல்லது கண்களால் கூட பார்த்திராத அநேக மக்கள் புரிந்து கொள்ள முடியாதல்லவா? அதனால்தான், நமதாண்டவர் ஆட்சிபீடத்தில் இருக்கிறவர்கள் தொடங்கி அன்றாடம் கூலி வேலை செய்யும் மக்கள் வரை பயன்படுத்தும் உப்பை உதாரணப்படுத்தியிருக்கிறார் என்றால் நிச்சயம் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஞான விளக்கங்கள் இதிலே இருக்கிறது. நம்முடைய நாட்களில் மனிதர்கள் உப்பைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள்?

உப்பில்லா பண்டம் குப்பையிலே, உப்பைத்திண்றவன் தண்ணீர் குடிப்பான், உப்பு போட்டுதானே சாப்பிடுகிறாய், உங்க உப்பைத்தின்ற விசுவாசத்தில பேசுகிறேன். என பலவாறு தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த உப்பைப் பயன்படுத்துகின்றனர். சரி, நமது ஆண்டவர் சொன்னதின் ஞான அர்த்தம் என்ன? உப்பின் தன்மைகள் என்ன?

அ. உப்பின் நிறம் வெள்ளை. சமாதானத்தின் அடையாளம் வெண்மை நிற கொடிதான். ஐக்கியநாடுகளின் கூட்டமைப்பு கட்டிடத்தின் முகப்பில் வெண்புறா பொறிக்கப்பட்டுள்ளது. பிரியமானவர்களே இந்த உலகம் மாறுபாடுள்ள சந்ததியாலும் கோணலும் மாறுபாடானவர்களாலும் நிறைந்துள்ளது (பிலி.2:15). இந்த உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது (1யோவா.5:19). அதனால் தான் திரும்பிய பக்கமெல்லாம் சண்டை, சச்சரவு, பிரிவினை, உயிர்ச்சேதங்கள், பொருள்

சேதங்கள், இன்னும் சொல்லமுடியாத அசுத்தங்களாலும் நிறைந்து இருக்கிறது.

ஆனால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய நாமோ சமாதானமுள்ளவர்களாகவும் இருக்கும்படி தேவன் விரும்புகிறார் (மத்.5:9). சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் (கொலோ.3:12).

நாம் தேவனுடைய புத்திரராக வேண்டுமானால் (ரோம.12:18) -ன்படி உங்களால் ஆனமட்டும் யாவரோடும் சமாதானமாயிருக்க நாடுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே? (நீதி.27:1).

**ஆ. உப்பு கரையும் தன்மையுள்ளது.** கரையும் தன்மை அதாவது மனதுருக்கம் கிறிஸ்தவ பண்புகளில் மிக முக்கியமானதாகும் நம் தேவன் (சங்.111:4, யாத்.34:6) கர்த்தர் இரக்கம் உடையவர் நமதாண்டவர் (மத்.9:36) மேய்ப்பனில்லாத ஆடுகள் போல் இருந்தவர்களைக் கண்டு மனதுருகினார் (மத்.14:14). ஜனங்கள் மீது மனதுருகி வியாதியஸ்தர்களை சுகமாக்கினார். இரக்கத்தின் அவசியத்தை போதிக்கும் அளவு கிறிஸ்தவத்தில் இரக்க மின்றி போய்விட்டதா என யோசிக்கிறீர்களா? இன்னும் அந்த அளவு நிலைமை போய்விட வில்லை யானை படுத்தாலும் குதிரை மட்டம் என்பது போல இன்னும் மனதுருக்கமும், இரக்கமும் இருக்கிறது. ஆனால் இருக்கவேண்டிய அளவு அல்லது தேவன் எதிர்பார்க்கும் அளவு இருக்கவேண்டுமே!

அப்.3:1-8 வசனங்களில் நாம் காண்பது என்ன? ஒரு பிச்சைக்காரன் தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையிலே உட்கார்ந்து பிச்சை கேட்டான். அவனது தினசரி வாழ்க்கையே அதுதான் ஏனெனில் அவன் பிறவி சப்பாணி. அவன் எங்கே உட்கார்ந்திருந்தான் தேவாலய வாசலிலே ஏனெனில் அங்கே தான் கொஞ்சம் இரக்ககுணமுடையவர்கள் வருவார்கள். ஜெபவேளையிலே ஒருநாளில் சிலதடவையாவது யூதர்கள் தேவாலயத்திற்கு வருவார்கள். இவர்கள் பிச்சை கேட்ட சப்பாணிக்கு தங்களிடம் இருந்த காசுகளை அவனுக்கு தானமாக தந்ததே பெரிய சேவையாக நினைத்திருக்கலாம். ஆனால் பேதுருவும் யோவானும் நிரந்தர தீர்வுக்கு வழிநடத்தினார்கள். அதாவது இனியும் அவன் பிச்சையெடுக்ககூடாதென்றால் என்ன செய்ய வேண்டும்? அவனிடமிருந்த மிகப்பெரும் குறை நடக்க முடியாத அவனுடைய கால்கள் அதை இயேசுவின் நாமத்தில் சுகமாக்கினார் அவன் சுகமடைந்தான். இனி அவன் பிச்சையெடுக்க மாட்டான் . அதற்கு அவசியமில்லை. இன்றைக்கு பாவத்தின் பிடியில் மற்றும் நீங்கள் சந்திக்கிற வறியவர், நண்பர்கள் ஆகியோருக்கு உங்களால் ஆன சிறுசிறு அல்லது பெரிய உதவிகளைச் செய்திருக்கலாம். ஆனால் நாம் செய்யவேண்டிய மிகப்பெரிய உதவி பாவிகளை நீதிமானாக்குகிற கிறிஸ்துவினிடம் வழி நடத்துவதே உங்கள் மெய்யான மனதுருக்கம்.

**இ. உப்பு சுவை கூட்டக் கூடியது.** தன்னையே கரைத்துக் கொண்டு தன் சுவையை உணவிற்கு தரக்கூடியது. (பிலி.2:5) இயேசுகிறிஸ்துவிலிருந்த சிந்தை

நமக்குள் இருக்கிறதல்லவா? இந்த சிந்தை நம்மோடு பழகுவோர், அண்டை அயலார் யாவருக்கும் நமது கிறிஸ்தவபண்புகள் அவர்கள் வாழ்வில் சுவை கூட்டக் கூடியதாகயிருக்கவேண்டும். இப்படிப்பட்ட நற்கிரியைகளைக் நம்மில் காணும்தேவன் மகிமைப்படுவார் (மத்.5:16). சமாதானமும், மனதுருக்கமும் பிறரை நல்வழிநடத்தும். நாமும் அநேகருக்கு உப்பாக பயன்படுவோம்.

## சகரியா | பழைய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | ZECHARIAH

**பொருள்** : தேவனுடைய பராமரிப்பையும், இஸ்ரவேலின் இறுதி வெற்றியையும் குறித்து மீதியானவர்களுக்கு மீண்டுமாக உறுதியளித்தல்

**ஆக்கியோன்** : சகரியா

**காலம்** : ஏறக்குறைய கி.மு.520 - 515

**திட்டவரைக் குறிப்பு** : ★கர்த்தருடைய வழி நீதியானது - 1:1-6

★கர்த்தருடைய பரிசுத்தமான ஜனங்களுக்கு செழுமையை வாக்களிக்கிறார் - 1:7-6:15

★ கரிசனையுள்ள கர்த்தர் ஒரு நீதியுள்ள இரக்கத்தை நாடுகிறார், ஒடுக்கத்தையல்ல - 7:1-8:23

★ கர்த்தர் தம்முடைய ஜனத்தின் எதிர்காலத்தைக் கட்டுப்படுத்துகிறார் - 9:1-11:17

★ கர்த்தர் தம்முடைய நாளில் தம்முடைய ஜனங்களை சுத்திகரித்து விடுவிப்பார் - 12:1-14:21

**சிறப்புச் செய்தி :**

"யூதா வம்சத்தாரே, இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபமாயிருந்தது போலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன்; பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது".

**வரலாற்று பின்னணி :**

செருபாபேல் மற்றும் ஆகாயின்கீழ் ஆலயம் கட்டப்பட்டது. வரவிருக்கும் மேசியாவின் காலத்தையும், தேவனுடைய ஆட்சி நிறைவுபெறும் காலத்தையும் குறித்த வெளிப்பாட்டை சகரியாவுக்கு அளித்தல்.

**ஆன்மீக ஆலோசனை**

"உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்" (யாக்.3:13).

# வேத அறிவுப் போட்டி எண்-49

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25-ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். உங்கள் பதிவு எண்ணுடன் முழு முகவரியை எழுதவும். (ஒரே நபர் இரண்டுபேருக்கு எழுதாதீர்)*

1. பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் எவளுடைய இருதயத்தைத் திறந்தருளினார்?
2. சபையில் முதன்மையாயிருக்க விரும்பினவன் யார்?
3. நான் நிறைவுள்ளவனாய்ப் போனேன்; கர்த்தர் என்னை வெறுமையாய்த் திரும்பிவரப்பண்ணினார் என்றவள் யார்?
4. எந்த பர்வதத்தில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு இருப்பாயுதம்படாத முழுக்கற்களால் ஒரு பலிபீடத்தை நூனின் குமாரன் கட்டினான்?
5. இஸ்ரவேலின் குமாரரில் ஒருவனும் எப்படிப்பட்டவனாயிருக்கக் கூடாது?
6. எல்லாம் எதிலே உண்டாகிறது, எல்லாம் எதற்குத் திரும்புகிறது?
7. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தத்தை யூதா ஜனங்கள் பரிசுத்தக் குலைச்சலாக்கி எந்த தேவதையின் குமாரத்திகளை விவாகம் பண்ணினார்கள்?
8. அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும், எதைச் சுவிசேஷமாக அறிவித்தார்?
9. நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, எதினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்?
10. கர்த்தர் சபையை போஷித்துக் காப்பாற்றுகிறது போல ஒவ்வொருவனும் எதைப் போஷித்துக் காப்பாற்றுகிறான்?

## நடப்புச் செய்திகள்

- தமிழ் நாட்டில் நிலவும் கடும் வறட்சியை சமாளிக்க ரூ.1,680 கோடி நிதி உதவி வழங்கக்கோரி பிரதமருக்கு முதல் அமைச்சர் ஜெயலலிதா அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.
- ஈராக்கில் சதாம் உசேன் மீதான வெற்றிக்குப் பிறகான நிலைமையைக் கணிப்பதில் தவறு செய்துவிட்டேன் என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஒப்புக்கொண்டுள்ளார்.
- சூப்பர் மேன் தொடரை டி.வி.யில் பார்த்த சீனாவைச்சேர்ந்த 9-வயது சிறுவன் 'சூப்பர் மேன்' போல மாடியில் இருந்து குதித்தபோது காயம் அடைந்தான்.
- ஐரோப்பிய வான வெளி ஆராய்ச்சியாளர்கள் சூரிய மண்டலத்துக்கு வெளியே புதிய கிரகத்தை கண்டுபிடித்து உள்ளனர். இது பூமியை விட 14 ங்கு மடங்கு பெரியது 50 ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் உள்ளது.
- 28-வது ஒலிம்பிக்போட்டியில் பதக்கப்பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்தை பிடித்தது. சீனா 2-வது இடத்தையும், ரஷியா 3-வது இடத்திதையும் பிடித்தன.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**


Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th Sep 2004.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.




**Monthly Magazine**

To



# HEAR THE VOICE OF TRUTH

ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 a.m 7.00 a.m | Box. 3815 New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon Wed,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80 Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue, Wed, Thu, Fri | 5.30 p.m 5.45 p.m | Box. 8405 Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Box. 5540 Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.